# அரக்கனை வென்ற சிறுவன் 14

அது ஏலாபள்ளத்தாக்கின் அழகிய மலையுச்சி. என்றும் போல காலைக்கதிரவனின் வெய்யில் அன்றும் அம்மலையுச்சியில் மெல்லப் பரவியது. ஆனால் அன்று மலையுச்சியைப் பார்த்த இஸ்ரவேலர் அங்கே ஒரு பயங்கரக்காட்சியைக் கண்டனர். இராட்சத உருவங்கொண்ட பெலிஸ்தினியப் படை வீரன் ஒருவன் அந்த மலையுச்சியில் நின்று கொண்டிருந்தான். பள்ளத்தாக்கில் அணிவகுத்திருந்த இஸ்ரவேலப் படைவீரர்களைப் பார்த்து அவன் அவமதித்துப் பேசினான்.

‘‘ கடவுளின் படைவீரர்கள் என்று பொய்ப்பெருமை பேசிக்கொள்பவர்களே! ஏன் பள்ளத்தாக்கில் ஒளிந்து கொண்டிருக்கிறீர்கள்? இன்று உங்கள் கடவுளுக்கு நான் சவால் விடுகின்றேன். என்னை எதிர்த்துப் போரிட ஒரேயொரு சுத்தவீரனை மட்டும் அனுப்பிவையுங்கள். அவனை நான் கொல்வேன். அப்போதுதான் உங்கள் கடவுள் பலமில்லாதவர் என்பதை நீங்கள் காண்பீர்கள். அதன் பிறகு உங்களை எங்கள் அடிமைகள் ஆக்குவேன்’’

பத்தடி உயரமும் உடம்பு முழுவதும் வெண்கலக் கவச அணிகளையும் கொண்ட அரக்கன் அவன். அவன்தான் கோலியாத். கோலியாத் பேசிய பேச்சின் உரத்த சத்தம் அங்கே மலைகள் முழுவதிலும் எதிரொலித்தது.



இஸ்ரவேல் படைவீரர்கள் பல போர்களைக் கண்டிருந்தார்கள். இருந்தபோதும் கோலியாத் எனும் இராட்சதனோடு போரிட எவரும் முன்வரவில்லை. கோலியாத்தை எதிர்த்துப் போரிடக் கூடிய ஒருத்தன் அவர்களிடையே இருந்தான். அவன்தான் தாவீது.



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

மந்தை மேய்க்கும் சிறுவன். அவனது மூத்த சகோதரர்கள் போர் புரியும் இஸ்ரவேல் படைவீரர்கள் ஆவார். அவர்களுக்கு உணவு எடுத்து கொண்டு தாவீது தினமும் பாசறைக்குச் செல்வான். அன்றும் தாவீது போர்ப் பாசறைக்கு வந்திருந்தான். கோலியாத்துக்கு எல்லாரும் பயந்து நடுங்குவதைக் கண்டு தாவீது திகைத்தான். கடவுளுக்கு எதிராகக் கோலியாத் பேசியதைக் கேட்டுக் கோபங்கொண்டான்.

''கோலியாத் என்ன நினைத்துள்ளான்? நம் கடவுளுக்கு எதிராக இவ்வாறு அவன் பேச முடியுமா? கோலியாத்தோடு போரிட்டு அவனைக் கொல்வேன்.

என் தந்தையின் மந்தையைச் சிங்கமும் கரடியும், தாக்கின. அப்போதெல்லாம் அவற்றை நான் அடித்துக் கொன்று மந்தையைக் காப்பாற்றினேன். சிங்கத்திடமிருந்தும் கரடியிடமிருந்தும் என் தேவனாகிய கடவுள் என்னைக் காப்பாற்றினார். கோலியாத்திடமிருந்தும் அவர் என்னைக் காப்பாற்றுவார்.''

இஸ்ரவேலரின் மன்னன் சவுல் இதை அறிந்தான். தாவீதை அழைத்தான். தலைக்கும் உடலுக்கும் அணியச் சிறந்த வெண்கலக் கவசங்களையும் வீரவாளையும் தாவீதுக்கு அளித்தான். தாவீது அவற்றைப் பெற்றுக் கொள்ள மறுத்தான்.

''அரசே, இவை எனக்கு வேண்டாம். நான் ஒரு போதும் இவற்றைப் பாவித்து அறியேன்! என்னுடைய கவணும், நாணும், கூழாங்கற்களும் எனக்குப் போதும். கடவுள் எப்போதும் என்னோடு இருக்கிறார்''

தாவீது நம்பிக்கையோடு கூறி அரசனிடம் விடைபெற்றுக் கொண்டு மலையுச்சிக்குச் சென்றான்.

தன்னோடு போரிட எதிரே வந்து நின்ற சிறுவன் தாவீதைக் கோலியாத் கண்டான். ஏளனம் கொண்டு கடகடவெனச் சிரித்தான்.

''பொடிப்பயலே, நீயா என்னுடன் போரிடவந்தாய்? வாடா வா! ஒரு நொடியில் உன்னைக் கொன்று பறவைகளுக்கும், விலங்குகளுக்கும் தீனியாக்குகிறேன்'' அரக்கன் கேலியாகத் தனது வாளை உருவியபடி சிறுவன் தாவீதின் முன் வந்தான்.

அப்போது தயாராக வைத்திருந்த தனது கவண்கல்லைத் தாவீது எடுத்தான். வேகமாகச் சுழற்றி முழுப்பலத்துடன் கோலியாத்தின் நெற்றியைக் குறிவைத்து எறிந்தான். அடுத்த கணம், 'ஆ' வென்ற மரண ஓலம் கேட்டது. அலறியபடி கோலியாத் மலைபோலக் கீழே சாய்ந்து விழுந்து இறந்தான். அதைக்கண்ட பெலிஸ்தினிய படைவீரர்கள் பயந்து பின்வாங்கி ஓடத்தொடங்கினர். தாவீது ஓடிச்



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

சென்று கோலியாத்தின் வாளை உருவி எடுத்தான். கோலியாத்தின் தலையைக் கொய்து அவனைக்கொன்றான். சிறுவன் தாவீது கோலியாத்தைக் கொன்று விட்டதை இஸ்ரவேல் வீரர்கள் கேள்வியுற்றனர். மகிழ்ச்சி ஆரவாரமிட்டு, வெற்றிக்களிப்போடு பெலிஸ்தினியரின் படையை விரட்டி அடித்தனர்.

**பாடத்தில் வரும் சில சொற்களுக்கான பொருள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அழகிய | - | ලස්සන | பலம் | - | ශක්තිය |
| கதிரவன் | - | හිරු / ඉර, සූර්යයා | வாள் | - | කඩුව |
| | | | நெற்றி | - | නළල |
| மலை | - | කන්ද | சிரித்தான் | - | සිනාවුනා |
| இராட்சத | - | රාක්ෂ | கவண் | - | කැටපොල්ල |
| பயங்கரம் | - | භයානක | கடவுள் | - | දෙවියෝ |
| காட்சி | - | දර්ශනය | | | |
| வீரன் | - | වීරයා | | | |
| போரிட | - | සටන් කිරීම | | | |

**கிரகித்தற் பயிற்சி**

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

පහත සඳහන් ප්‍රශ්නවලට පිළිතුරු ලියන්න.

1. மந்தை மேய்க்கும் சிறுவன் பெயர் என்ன?
2. பெலிஸ்தினிய படை வீரனின் உருவம் எவ்வாறிருந்தது?
3. போரிட வந்த தாவீதைப் பார்த்து அரக்கன் என்ன கூறினான்?
4. இஸ்ரவேல் மன்னன் பெயர் என்ன?
5. தாவீதின் தந்தையின் மந்தையைத் தாக்கிய மிருகங்கள் எவை?



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

## இலக்கணம்

### வினைச் சொல்

பின்வரும் உதாரணத்தை அவதானியுங்கள்.

தாவீது கல்லை **வீசினான்.**

இவ்வாக்கியத்தில் **வீசினான்** என்ற சொல் தாவீது செய்த செயலைக் குறிக்கின்றது.

இவ்வாறு ஒரு செயலை அல்லது வினையைக் குறிக்கும் சொல் **வினைச் சொல்** எனப்படும்.

(உ + ம்)

தாவீது நம்பிக்கையோடு **சென்றான்.**

குமார் வர்ணம் **தீட்டினான்.**

### செயற்பாடு I

அரக்கனை வென்ற சிறுவன் என்ற பாடத்திலுள்ள வினைச் சொற்களைப் பட்டியல் படுத்துங்கள். - ඉහත පාඩමේ ක්‍රියා පද වගුගත කරන්න.

### செயற்பாடு II

பட்டியல் படுத்திய வினைச் சொற்களைக் கால அடிப்படையில் வேறுபடுத்துங்கள். වගුගත කර ඇති ක්‍රියා පද කාලය අනුව ලියන්න.

| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|
| ---------- | ---------- | ---------- |
| ---------- | ---------- | ---------- |
| ---------- | ---------- | ---------- |
| ---------- | ---------- | ---------- |
| ---------- | ---------- | ---------- |
| ---------- | ---------- | ---------- |
| | | |



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

## செயற்பாடு III

அரக்கனை வென்ற சிறுவன் என்ற கதையினை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய்யுங்கள்.
පහත වාක්‍ය සම්පූර්ණ කරන්න.

1. வீரர்களைப் பார்த்து அவன் அவமதித்து ------------------------
2. உங்களை எங்கள் அடிமைகள் -------------------------------------
3. தாவீது போர்ப் பாசறைக்கு -----------------------------------------
4. கோலியாத்தோடு போரிட்டு அவனைக் --------------------------
5. கோலியாத் தாவீதின் முன் -------------------------------------------

## செயற்பாடு IV

பின்வரும் இறந்த கால வினைச் சொற்களை எதிர்காலத்திலும், நிகழ்காலத்திலும் மாற்றி எழுதுங்கள்.පහත අතීත ක්‍රියා පද වර්තමාන හා අනාගත කාලයට හරවන්න.

1. இஸ்ரவேலர் ஒரு பயங்கரக் காட்சியை கண்டனர்.

   ------------------------------------------------------------------------

   ------------------------------------------------------------------------

2. வீரன் ஒருவன் மலை உச்சியில் நின்றான்.

   ------------------------------------------------------------------------

   ------------------------------------------------------------------------

3. அவன் படை வீரர்களை அவமதித்துப் பேசினான்.

   ------------------------------------------------------------------------

   ------------------------------------------------------------------------



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

4. உங்கள் கடவுளுக்கு நான் சவால் விட்டேன்.

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

5. அவனை நான் அடிமை ஆக்கினேன்.

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

6. உரத்த சத்தம் மலைகள் முழுவதிலும் எதிரொலித்தது.

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

7. படைவீரர்கள் பல போர்களைக் கண்டிருந்தார்கள்.

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

8. தாவீது மலை உச்சிக்கு வந்தான்.

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

9. என் தந்தையின் மந்தையை சிங்கமும் கரடியும் தாக்கின.

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

10. நான் எனது தந்தையின் மந்தையைக் காப்பாற்றினேன்.

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

11. இஸ்ரேலின் மன்னன் இதை அறிந்தான்.

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

12. மன்னன் தாவீதை அழைத்தான்.

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

13. மன்னன் தலைக்கும் உடலுக்கும் வெண்கலக் கவசங்களையும், வீரவாளையும் அளித்தான்.

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

14. தாவீது அவற்றைப் பெற்றுக் கொள்ள மறுத்தான்.

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

15. தாவீதைக் கண்ட கோலியாத் ஏளனம் கொண்டு கடகடவெனச் சிரித்தான்.

---------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------

## செயற்பாடு V

பின்வரும் சொற்களைக் கொண்டு வாக்கியங்கள் அமையுங்கள்.
පහත සඳහන් වචන යොදා වාක්‍ය සාදන්න.

சென்றான், கண்டான், வந்தார், காப்பாற்றினீர்கள், அறிந்தேன், சிங்கங்கள், கரடி

## செயற்பாடு VI

வாக்கியம் அமைக்குக.

වාක්‍ය ලියන්න.

1. தாவீது ------------------------------------------------------------
2. நீங்கள் ------------------------------------------------------------
3. அவன் ------------------------------------------------------------
4. கோலியாத் ------------------------------------------------------------
5. வெய்யில் ------------------------------------------------------------
6. அவள் ------------------------------------------------------------
7. சிங்கமும் கரடியும் ------------------------------------------------------------
8. சிறுவன் ------------------------------------------------------------
9. அரசன் ------------------------------------------------------------
10. ஒருவன் ------------------------------------------------------------